ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.வீ. ஜெகதீசன்

ந.க.எண்.21955/2022/பஅ2-2 நாள்:09.11.2022

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை - ஈரோடு மாவட்டம் - 2020-21 ம் ஆண்டிற்கு 20% இடஒதுக்கீடு - இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-2/காசாளர் நிலையில் ஏற்படும் காலிப்பணியிடங்கள் - 20% இடஒதுக்கீட்டில் தேர்வு செய்யப்பட்ட தகுதியான ஊராட்சி செயலர்களுக்கு பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளர்களுக்கு பணியிடம் வழங்கி உத்தரவிடப்பட்டது - பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் - சார்பாக.

பார்வை:
1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் ந.க.எண்.21955/2022/பஅ2, நாள்: 28.07.2022.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), பெருந்துறை கடித ந.க.எண்.2522/2022/அ1, நாள்:02.08.2022.

*******

உத்தரவு:

பார்வை 1-ல் காணும் நடவடிக்கைகளின்படி ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் பணியாற்றி வரும் ஊராட்சி செயலர்களில் 2020-2021 ஆம் ஆண்டிற்கென 20 விழுக்காடு இடஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில் திரு.ரா. சுந்தரமூர்த்தி, ஊராட்சி செயலர் என்பவருக்கு பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை 2 ஆக பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் பணியிடம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி தனியர் பணியேற்பு செய்து கொண்ட விபரம் சம்மந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்டுள்ளது.

எனவே உரிய ஆவணங்களின் அடிப்படையில் தனியர் இளநிலை உதவியாளராகப் பணியேற்பு செய்த நாளில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது

| வ. எண். | பெயர்/பதவி/அலுவலகம் | பிறந்த தேதி | இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாள் | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | ரா. சுந்தரமூர்த்தி, ஊர்நல அலுவலர் நிலை-2, ஊராட்சி ஒன்றியம், பெருந்துறை. | 15.05.1977 | 29.07.2022 மு.ப. | 29.07.2022 மு.ப. |

மேற்காணும் உத்தரவு குறித்து தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள தொடர்புடைய அலுவலகத் தலைவருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சிப்பிரிவு)
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

9/11/2022

பெறுதல்

ரா. சுந்தரமூர்த்தி,
ஊர்நல அலுவலர் நிலை-2,
ஊராட்சி ஒன்றியம்,
பெருந்துறை.
(அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்: ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், பெருந்துறை.
நகல்: பஅ2 இருப்பு கோப்பிற்கு.